**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | CC 76/2025 |
| Deposition of witness | : | PW-7 |
| Name | : | **செந்தில்நாதன்** |
| Father Name | : | **சிவலிங்கம்** |
| Age | : | 39 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.01.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் வடவள்ளியில் வசித்து வருகிறேன். நான் கோனார் பைனான்ஸில் எழுத்தாளராக உள்ளேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். கடந்த 08.07.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.00-1.00 மணி அளவில் நானும் உதவியாளர் முருகனும் கடையில் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரி கடைக்கு வந்து 15 கிராம் எடையுள்ள வைக்கப்புள் மாடல் செயினை ரூபாய் 75 ஆயிரத்திற்கு அடகு வைத்தார். என்னிடம் அடகு வைத்த போது தான் மெக்கானிக் என்றும், redtaxi சார் வாங்க முன்பணம் தேவைப்பட்டதால் செயினை வைத்து பணம் வாங்குவதாக என்னிடம் சொன்னார். நான் அவரிடம் ஆதார் நகல் வாங்கிக்கொண்டு, பில் புக்கில் கையொப்பம் பெற்றேன். எதிரிக்கு ரிசிப்ட் எனது கையொப்பம் செய்து கொடுத்தேன்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் ரெஸிப்ட் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி ரெஸிப்ட் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** பின்பு 11.7.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 – 1.00 மணி அளவில் குன்னத்தூர் காவல் நிலையத்திலிருந்து காவல் உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு போலீசார் வந்தார்கள். அவருடன் ஆஜர் எதிரி அபிலாஷும், நவீன் குமார் என்பவரும் வந்தார்கள். அந்த சமயத்தில் உரிமையாளர் பாண்டியனும் அங்கு தான் இருந்தார். அவர்கள் ஆஜர் எதிரி அபிலேஷை காண்பித்து எனது கடையில் ஏதேனும் அடகு வைத்தாரா என்று கேட்டார்கள். நான் கொடுத்த மேற்படி ரசீதையும் காண்பித்தார்கள். நான் உடனே அடிக்கட்டை பார்த்து சொன்னேன். அப்போது கடை உரிமையாளர் பாண்டியன் நகையை எடுத்து காவல் உதவி ஆய்வாளர் வசம் ஆஜர் செய்தார்.

4. நகையை அவர்கள் பெற்றுக்கொண்டு அதற்கு என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நானும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னுடன் நவீன் குமாரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( **கைப்பற்றுதல் உள்ள அ.சா.7 ன் கையொப்பம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. தற்போது அதற்கான லெட்ஜர் அக்கவுண்டை தாக்கல் செய்கிறேன். 08.07.2025 ஆம் தேதி வரிசை எண்.5890–இல் உள்ள பதிவுகள் அதற்கானது தான். **(மேற்படி லெட்ஜர் பக்கத்தின் நகல் எதிரிக்கு இலவசமாக கொடுக்கப்பட்டு அதன் உண்மை நகல் நீதிமன்றத்தில் மு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள நகைதான் எதிரி எங்கள் கடையில் அடகு வைத்து போலீசாரால் கைப்பற்றப்பட்ட நகையாகும். என்னிடம் எதிரி நகையை அடமானம் வைத்ததற்காக சிசிடிவி பதிவு உள்ளது.

(அரசு தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.27 18:35:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

ஊத்துக்குளி.